இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக் கொடுக்க இயலும்?” என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது. இயேசு அவர்களிடம், “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்.” (யோவா 6:52-55)

# இணக்கத்தையும் அமைதியையும் அருள்பவர் ஆவியானவர்

## திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்:** உலகிற்கு நல்லிணக்கத்தை வழங்கும் மற்றும் காலத்தின் போக்கை வழிநடத்தி, பூமியின் முகத்தை புதுப்பிக்கும் தூய ஆவியானவரைத் தினமும் அழைக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த மே 28, ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பெராலயத்தில் கொண்டாடப்பட்ட பெந்தெகொஸ்து பெருவிழாத் திருப்பலியில் ஆற்றிய மறையுரையில் இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மீட்பின் வரலாற்றில் தூய ஆவியானவரின் பங்களிப்பு என்பது, படைப்பின் தொடக்கத்திலும், எல்லா நேரங்களிலும், அவர் உருவாக்கிய உண்மைகளை ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கிற்கும், சிதறலில் இருந்து ஒத்திசைவுக்கும், குழப்பத்திலிருந்து அமைதிக்கும் மாற்றுகிறது என்றும் தெரிவித்தார்.

### இணக்கத்தையும் அமைதியையும் அருளும் ஆவியானவர்

உலகிற்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில், தூய ஆவியானவர் காலத்தின் போக்கை வழிநடத்துகிறார் என்றும், பூமியின் முகத்தை புதுப்பிக்கிறார் என்றும் விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகம் முழுவதிலும் தூய ஆவியானவர் இறங்கி செயல்பட ஒவ்வொருநாளும் இறைவேண்டல் செய்வோம் என்றும் கேட்டுக்கொண்டார்.
கருத்து வேறுபாடுகள் மற்றும் பிளவுகளால் நிறைந்துள்ள இன்றைய உலகில், அவற்றை எதிர்க்கும் விதமாகத் தூய ஆவியானவர் வழங்கும் இந்த நல்லிணக்கம் மிகவும் அவசியம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்று நாம் காணும் பல போர்கள் மற்றும் மோதல்கள் யாவும் "பிளவு செய்பவர்"



என்று பொருள்படும் அலகை என்ற பிரிவினையின் ஆவியால் தூண்டப்பட்ட விரோதங்களே என்றும் சுட்டிக்காட்டினார்.

### வேற்றுமையில் ஒற்றுமை

திருத்தூதர் பணிகள் நூல் கூறுவதுபோன்று பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார்கள் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நாளில் அனைத்தும் நிரப்பப்பட்டன, திருஅவையின் வாழ்க்கை இப்படித்தான் தொடங்கியது என்றும், அப்படித்தான் ஆவியானவர் இணக்கத்தை உருவாக்குகிறார்; அவருடைய அன்பிலும் மற்றவர்களிடம் இருக்கும் திறமைகளிலும் வியப்பை அனுபவிக்க அவர் நம்மை அழைக்கிறார் என்றும் தெரிவித்தார்.

திருஅவையில் நடந்துகொண்டிருக்கும் ஒன்றிணைந்த பயணத்தை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ், இந்தப் பயணமானது தூய ஆவியில் இணைந்ததொரு பயணமாக இருக்க வேண்டும் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவரின் திட்டங்களுக்குக் கீழ்ப்படிவதற்கான வாய்ப்பாக இது இருக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியானவர் ஒருங்கிணைந்த பயணத்தின் இதயமாக விளங்குகிறார் என்றும் கூறினார்.

### இதயத்தில் இணக்கம்

நாம் கடவுளுடன் நெருக்கத்தை உருவாக்கும்போது, தூய ஆவியானவர் எவ்வாறு இதயத்தில் நல்லிணக்கத்தை மீட்டெடுக்கிறார் என்பதை விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பாவங்களை மன்னிக்கவும், மனங்களை இணக்கப்படுத்தவும், தீமையால் காயப்பட்ட, துயரங்களால் உடைந்த, குற்ற உணர்ச்சிகளால் வழிதவறிச் செல்லும் இதயங்களை ஒன்றிணைக்கவும் கடவுள் ஆவியானவரை அருளினார் என்றும் விவரித்தார்.

நமக்கு நல்லிணக்கம் வேண்டுமென்றால் உலக மாற்றங்களை அல்ல, மாறாக, தூய ஆவியானவரைத் தேடுவோம் என்றும், ஒவ்வொரு நாளும் தூய ஆவியானவரை அழைத்து அவரிடம் இறைவேண்டல் செய்து நம் நாளைத் தொடங்குவதுடன், நாம் முற்றிலும் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்போம் என்றும் அறிவுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மாதாந்திர மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான உருவாக்கப்பயிற்சி

ஆசிரியருக்கான அடிப்படை பயிற்சி கடந்த 2022 ஜூலை மாதம் தொடக்கம் கண்டது. இதில் ஏறக்குறைய 17 மறைக்கல்வி ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். கடந்த ஏப்ரல் 29, சனிக்கிழமையன்று, மூன்றாவது முறையாக நேர்முக சந்திப்பின் வழி பயிற்சி இடம்பெற்றது.

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான மறைக்கல்வி நாள் பாடத்திட்டத்திற்கான சகோதரி மாணிக்கத்தின் தெளிவான விளக்கத்திற்குப் பின், பயிற்சியாளர்கள் திறன் பயிற்சியில் பங்குபெற்றனர். அத்தோடு, மறைக்கல்வி ஆசிரியர்களின் பயிற்சிக்காக தயாரிக்கப்பட்ட மறைக்கல்வி நாள் பாடத் திட்டங்களின் படைப்பின் போது அனைவரும் முழு ஈடுபாட்டுடன் பாகமேற்று வழங்கியது மேலும் சிறப்பாக அமைந்தது.

குழுவில் கலந்துரையாடியதும், படைப்பிற்குப் பின் பகிரப்பட்ட கருத்துகளும் புரிதலை மேம்படுத்தியது. மேலும், தயாரிக்கப்பட்ட நாள்திட்டத்தையொட்டிய அறிவை ஆழப்படுத்தியது; அனுபவத்தைப் பெருக்கியது. இதற்கு மலேசிய மறைக்கல்வி நூல் வரிசை பெரும்பங்காற்றியது.






குழு நடவடிக்கைகளில் ஆர்வத்தோடு பங்கேற்ற ஆசிரியர்கள்

தொடர்ந்து மதிப்பீட்டின் வகைகளையும் அவற்றின் அவசியத்தையும் சகோதரி மாணிக்கம் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். முறையான மறைக்கல்வி நாள் பாடத்திட்டம் கற்பித்தலின் நோக்கத்தையும் கற்றலின் அடைவுநிலையையும் மேம்படுத்த உதவும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை என்றார்.

மறைக்கல்வி ஆசிரியர்களில் சிலர் தங்களின் பகிர்வில் இப்பயிற்சியில் கற்றுக்கொண்டவற்றை, வகுப்பு போதானாமுறையில் கடைப்பிடிக்கும்போது மறைக்கல்வி மாணவர்களின் வருகையும் அவர்களின் ஈடுபாடும் அதிகரித்தது எனக் கருத்துரைத்தனர்.

*-சித்ரா பிலோமீனா ஜோசப்*

# 25-வது வட்டார ஆயர் பேரவை திருவழிபாட்டு ஆணையக் கூட்டம் நடைபெற்றது

**கூச்சிங்:** மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய நாடுகளின் (Catholic Bishops' Conference for Malaysia, Singapore & Brunei, CBCMSB) 11 ஆயர்கள்/பேராயர்கள் கொண்ட வட்டார பேரவையைப் பிரதிநிதித்து 27 திருவழிபாட்டு பேராளர்கள் 25-வது திருவழிபாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டம் கடந்த மே திங்கள் 22 முதல் 24 வரை இங்குள்ள புனித பேதுரு குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வழக்கமாக மூன்று நாடுகளைக் கொண்ட இந்த வட்டாரத்திற்கான திருவழிபாடு சம்மந்தப் பட்ட விடயங்கள், ஒத்துழைப்பு, தொடர்பு மற்றும் களஞ்சிய மூலங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றையொட்டி விவாதித்து ஏற்கப்படும்.

இத்திருவழிபாட்டு பேரவையின் தலைவர் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், அனைத்து பிரதிநிதிகளையும் வரவேற்ற தோடு, அந்த 25வது பேரவைக் கூட்டத்தில் அனைத்து மாமறை/மறைமாவட்டங்களும் முழுமையாக பிரதிநிதிக்கப்பட்டதற்காக நன்றி கூறினார். மேலும், கூட்டத்ல் கலந்துகொண்டோருக்கு, கூட்டொருங் கியக்கப் பயணம் (சினோடல் பயணம்) மற்றும் மலேசிய ஆயர் மாநாடு 2026 நோக்கிய பயணம் குறித்து விளக்கினார்.

விவாதிக்கப்பட்ட பிற திருவழிபாட்டு தலைப்புகளில் மலேசிய மொழி திருப்பலி நூல்கள் மற்றும் புதுப்பிக்கட்ட வாசகநூல் ஆகிவையும் அடங்கும். ஆயர் பிரான்சிஸ், தற்போதுள்ள அனைத்து மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய வட்டார நாடுகளுக்கான மலேசியமொழிக்கான வாசக நூலுக்கு *Alkitab Versi Borneo (AVB)* எனும் போர்னியோ மொழி பெயர்ப்பு திருவிவிலியம் அதிகாரப் பூர்வமான நூலாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது என்று அறிவத்தார். மேலும், கூச்சிங் மாமறைமாவட்டத்தின் பேராயர் சைமன் போ அவர்கள் வாராந்திர ஞாயிறு வாசகங்களைத் தயாரித்து அனுப்பும் பணியை ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் கூட்டத்தில் தெரிவித்தார்.

தொடர்ந்து, மிரி மறைமாவட்டத்தின் ஆயர் ரிச்சர்ட் இங் அவர்களின் தலைமையிலான செயற்குழு ஒன்று, இணைச்சட்ட நூல்களை (ஏழு நூல்களை) கத்தோலிக்கர்களுக்கென, 'போர்னியோ மொழிபெயர்ப்பு திருவிவி லியத்தில்' இணைக்க (AVB) மொழிப் பெயர்ப்பு செய்துள்ளதாகவும் விவரித்தார். பின்னர் இந்த இணைச்சட்ட நூல்களோடு ஒரு கத்தோலிக்க மலாய் மொழி விவிலியம் இவ்வட்டாரத்திற்கென வெளியீடு காண லாம் என்றும் அறிவித்தார்.

அடுத்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய நாடுகளின் திருவழிபாட்டு ஆணையத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டோருக்கு ஆங்கிலத்தில் வெளியாக வுள்ள *Sing Your Praise To God* எனும் திருப்பலிக்கான புதிய பாடற் புத்தகத்தின் துணை நூலானது அச்சிடும் இறுதி நிலையில் உள்ளது என்றும் விளக்கமளித்தார்.

மேலும், இந்த திருவழிபாட்டு ஆணையத் தின் செயலாளரான அருள்தந்தை வின்சென்ட் சின், மேற்கூறப்பட்ட புதிய பாட்டுப் புத்தகம் வெளியிடும் பணி, இந்த வட்டார ஆயர்கள் பேரவையினால் 20 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது என்றும், இப்புத்தகத்தில் கண்டுள்ள அனைத்து பாடல்களும் வழிபாட்டு முறைக்கு ஏற்றது என்றும் விளக்கமளித் தார். .

சீன திருவழிப்பாட்டுக்கான பாடற் புத்தகத் தயாரிப்பானது செயல்பாட்டில் உள்ள தாகவும், இப்போது இதற்கான செயற்குழு இந்த வட்டாரத்தில் பயன்படுத்தப்படும் சீன மொழி பாடற்புத்தகங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. மேலும், அனைத்து பாடற்குழுவும் தாங்கள் பயன்படுத்தும் பாடல்களின் பட்டியலை எதிர்வரும் ஜூன் 2024க்குள் ஒப்படைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்து.

அவ்வாறே, சபாவுக்கான கடசான்-டூசுன் மொழியிலான பாடற் புத்தகமும் தாயரிக்கப்பட்டு வருவதாகவும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.



*அனைத்து மாமறை/மறைமாவட்ட பிரதிநிதிகள்*

நிறைவாக, இவ்வாண்டு டிசம்பர் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால், அன்றைய காலை திருப்பலிகள் திருவருகைக் காலத்தின் 4-ம் ஞாயிறுக்கான வாசகங்களையும் (ஆண்டு B), மாலைத் திருப்பலிக்கு கிறிஸ்மஸ் நள்ளிரவுக்கான வாசகங்களையும் பயன்படுத்த வேண்டும் என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

அடுத்த வட்டார திருவழிபாட்டுக்கூட்ட மானது 2024-ம் ஆண்டு, ஜூன் திங்கள் 3-6 ஆம் திகதிகளில், சராவாக், மிரியில் நடைபெற முடிவெடுக்கப்பட்டது.

# மலாக்கா, ஜாசின், தூய ஆவியார் பங்கில் பெந்தகோஸ்து பெருவிழா கொண்டாட்டம்

மலாக்கா: கடந்த 27, மே திங்கள் 2023, சனிக்கிழமை அன்று, ஜாசின் தூய ஆவியார் பங்கில் 9 நாள் நவநாள் மற்றும் குணமளித்தல் வழிபாட்டுடன் பெந்தகோஸ்து பெருவிழா மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியுடன் கொண்டாடப்பட்டது.



இப்பெருவிழாவிற்கு மெருகூட்டும் வகையில் ஜாசின் பங்குத்தந்தை ம. தேவதாசன் அவர்களுடன் இணைந்து தமிழ்நாட்டை சேர்ந்த ஐந்து அருள்பணியாளர்களும் வழிபாட்டில் மக்களை நம்பிக்கையில் ஆழ்த்தினர். இவ்வேளையில் பங்கின் ஒருங்கிணைப்பாளர் சகோதரர் ம. அந்தோனிசாமி அவர்களின் தலைமையில் திருப்பலி பாடல்களும் பெருவிழாக் கொண்டாட்டத்திற்கு மெருகூட்டின.

நிறைவாக, அனைத்து ஆலயப் பொருப்பாளர்கள், திருவழிபாடு மற்றும் அதன் துணை குழுக்கள், பங்கு மக்களுக்கும், ஏற்பாட்டு குழுவிற்கும் அருள்தந்தையர் களுக்கும் பங்குத் தந்தை நன்றி மலர்களைச் சமர்ப்பிக் கொண்டார்.

# நற்கருணை மீட்பளிக்கும் தெய்வீக உடனிருப்பு

தாய் திருஅவை இன்று 'கிறிஸ்துவின் திரு உடல், திருஇரத்தப் பெருவிழா'வைக் கொண்டாடுகிறது. இயேசுவைச் சந்திக்க நாம் அனைவரும் விரும்புகிறோம். அவரோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள விழைகிறோம். நமது வாழ்வின் பெரும் பகுதியை இயேசு ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும் என மன்றாடுகிறோம். அது எவ்வாறு சாத்திய மாகும்?

பாலைநிலத்தில் இஸ்ராயேல் மூதாதையர் களின் பசியைப் போக்க மன்னாவைக் கடவுள் வழங்கினார் என முதல் வாசகத்தில் (இச.8:2-3;14-16) காண்கிறோம். விடுதலைப் பயணத்தில் மூதாதையர்கள் எதிர்நோக்கிய தடைக்கற்களும் முட்டுக் கட்டைகளும் தடங்கல்களும் ஏராளம். எகிப்து நாட்டிற்கு பஞ்சம் பிழைக்கச் சென்ற இஸ்ராயேல் மக்கள் அந்நாட்டின் வளமிகு கோசேன் பகுதியில் குடியேறி செழிப்பாக வாழ்ந்தனர். செழிப்பின் காரணத்தால் சேர்ந்த செல்வமும் சொகுசு வாழ்க்கையும் அவர்களின் மனத்தை செல்லரித்துப்போனது. எகிப்தியப் பழக்க வழக்கங்களுக்குப் பித்தாகினர். விடுதலைப் பயணத்தின் போது, அவர்கள் சந்திக்க நேர்ந்த சிரமங்களைக் காட்டிலும் எகிப்திய அடிமை வாழ்வு மேல் என மோசேயிடம் முறையிட்டனர். எகிப்து நாட்டில் தங்களது அடிமை வாழ்வின் குணாதியங்களை மறக்க முடியாமல் மோசே உடன் மல்லுக்கட்டும் அந்த மக்களுக்காக கடவுள் வழங்கிய அருமருந்தே, 'மன்னா'. கடவுள் வாக் களித்த நாட்டை நோக்கியப் பயணத்தைத் தொடர அன்று ஆற்றலையும் சக்தியையும் அளித்தது 'மன்னா'.

இன்று, வாக்களிக்கப்பட்ட நாட்டை (விண்ணகம்) சேரவே நாம் அனைவரும் வேட்கைக் கொண்டிருக்கிறோம். இவ்வுலக இச்சைகளுக்கு நாமும் அடிமைகளாக இருக்கிறோம்! இந்த சேற்றிலிருந்து கரையேற நமக்கும் 'மன்னா' தேவைப் படுகிறது. "விண்ணிலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உண நானே" (யோவா.6:51) என்றுரைத்த இயேசு கிறிஸ்து தம்மையே உணவாக வழங்குகிறார். "இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்துபோனார். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்" (யோவா.6:58) என நற்செய்தியில் ஆண்டவர் உறுதியளிக்கிறார்.

நமது இறையியலாளர்கள், 'நற்கருணை திருஅவையைக் கட்டியெழுப்புகிறது, திருவையோ நற்கருணையை ஏற்படுத்து கிறது என்கிறார்கள். ஆம் திருஅவை இல்லையெனில் நற்கருணை இல்லை. அவ்வாறே, நற்கருணை இல்லையெனில் திருஅவையும் இல்லை. புதிய உடன்படிக் கையின்படி, புதிய விண்ணும், புதிய மண்ணும் (திருவெளி 21:1-2) வரவிருக் கின்றது. அதற்கு இப்போதே தயாரா குங்கள் என நம்மை உசிப்பிவிடும் உணவாக அமைகிறது நற்கருணை.

*'நட்ட கல்லைச் சுற்றியே நாலு புஷ்பம் சாற்றியே. சுற்றி வந்து முனுமுனென்று சொல்லும் மந்திரம் ஏதடா, நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையில்' என்கறார் -சித்தர் சிவவாக்கியார்.*

ஆம், நற்கருணை வழியாக நம்மில் உறையும் ஆண்டவரை நாம் முதலில் கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றாக ஏற்று, ஆராதித்து வழிபட வேண்டும். இல்லையேல் திருப்பலிக்குச் செல்வதும் உதட்டளவில் செபங்களை முனுமுனுவென்று ஒப்புவிப் பதிலும் பயனேதும் இல்லை.

நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் உற்றும் சிகரமுமாக உள்ளது என்கிறது 2-ம் வத்திக்கான் சங்கம். எனவே, நற்கருணை நாதர் நம்மில் உறைவதை உணர்ந்து, ஒரே எண்ணமும், ஒரே உள்ளமும் கொண்ட வர்களாய் ஒன்றுபட்டு வாழ்வோம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்*

**கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம்**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | இ.ச 8: 2-3, 14b-16a |
| பதிலுரை | 147: 12-13. 14-15. 19-20 |
| 2 வாசகம் | 1 கொரி 10: 16-17 |
| நற்செய்தி | யோவான் 6: 51-58 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- பெருவிழாவக்கானது**